## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.162/2019

2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 14 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 14.06.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மணிமேகலை | ஜாதி | : |
| க /பெயர் : | சிவசுப்ரமணியன் | மதம் | : |
| கிராமம் : | | தொழில் | : |
| வட்டம் : | | வயது | : |

வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1.** தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது அயிட்ட சொத்தில் புல எண்.377/3 பி சொத்திற்குண்டான நான்கெல்லை ரோட்டிற்கு தெற்கு, கணபதி நஞ்சைக்கு கிழக்கு, பாசன கன்னிக்கு வடக்கு , ராமையன் நஞ்சை மற்றும் வசந்திபட்டா கன்னிக்கு மேற்கு இதற்குட்பட்டது என்பது சரிதான். பாசன கன்னி வழியாகத்தான் புல எண்.377/3 பி என்ற எனது நிலத்திற்கு தண்ணீர் பாயவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு கிரைய சாசனம் செய்துக்கொடுத்த பானுமதி பாசன கன்னி வழியாகதான் எனக்கு சொந்தமான நிலத்திற்கு பாசனம் செய்யப்படும் என்று சொல்லியுள்ளதை மறுத்து நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் தவறு. சர்வே எண்.325/5 நான்கெல்லை ரோட்டிற்கு வடக்கில் தான் உள்ளது என்றால் சரிதான்.

2. சர்வே எண்.325/5, 2 வது அயிட்ட சொத்தான புல எண்.377/3 பி இரண்டிற்கும் நடுவில் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். அடிகணக்கு தெரியாது. கார் போகும் அளவிற்கு ரோடு உள்ளது. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிஸ்து ரசீது என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு என்

பெயரில் கிஸ்து ரசீது வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். பட்டா எண்.100 யாருக்கு உள்ளது என்றால் அது எங்களுக்கு வழங்கப்பட்டது தான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் காணப்பட்டுள்ள பட்டா எண்.100 என்பது எனக்கு முன்னர் அனுபவம் செய்து வந்த நபர்களுக்கு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பட்டா எண்.855 என்பது எனக்கோ, எனக்கு முன்பு உள்ள நபர்களுக்கு வழங்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு அருகிலுள்ள நிலத்தை வசந்தி என்பவர் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நான் வசந்தி மற்றும் கலைவாணன் ஆகியோர்களுடமிருந்து கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். ஆனால் கலைவாணன் எனக்கு கிரையம் செய்துக்கொடுத்த காந்திமதியின் மகன் ஆவார். காந்திமதியின் கணவர் பெயர் வெங்கடாஜலம் என வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெங்கடாஜலம் மற்றும் வெங்கட்ராமன் என்பவரும் வேறு வேறு நபர்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பட்டா எண்.855 வெங்கட்ராமன் மகன் கலைவாணன் என்பவர் எனக்கு முந்தைய உரிமையாளர் என்றால் சரியல்ல.

4. வா.சாஆ.5 ஆவணத்தில் சிட்டாவில் குறிப்பிட்டுள்ள பட்டா எண். 879 மற்றும் 880 பிரதிவாதிக்கு சொந்தமான சொத்திற்குண்டானது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. புல எண்கள் 325/5 திட்ட விஸ்தீரம் 19 சென்ட், 327/3 பி திட்ட விஸ்தீரணம் 87 சென்ட் ஆகும். வழக்குரை பி அட்டவணையிலுள்ள சர்வே எண் தவறானது என்றும், அது மீண்டும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பி அட்டவணை சொத்திற்குரிய உட்பிரிவை சரியாக குறிப்பிடாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரியல்ல.

5. புல எண்.325 மற்றும் 327/3 பி திட்ட விஸ்தீரணம் அதிகமானது என்றாலும், நான் சரியாக குறிப்பிடாமல் நான் திட்ட விஸ்தீரணமான குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. புல எண்.325/5 சொத்திற்கு மேற்கில் யோகேஷ்வரன் என்பவருக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேற்கில்

பாமணியாற்றிலிருந்து ஒரு பாசன வாய்க்கால் உள்ளது என்றாலும், அது தான் சித்தமல்லி வருவாய் கிராமத்திலுள்ள நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கக்கூடிய பாசன வாய்க்கால் என்றால் சரியல்ல.

6. இந்த வாய்க்கால் வடக்கு தெற்காக வந்து மீண்டும் யோகேஷ்வரன் நிலத்திற்கு தண்ணீர் பாய்ந்து அதன்பிறகு தான் என் நிலத்திற்கு தண்ணீர் பாயவேண்டும் என்றால் சரியல்ல. அந்த வாய்கால் இன்னும் சிறிது தூரம் வந்து கிழக்கு மேற்காக சென்று அந்த பாசன வாய்க்கால் வழியாகத்தான் 2 வதுஅயிட்ட சொத்திற்கு தண்ணீர் பாயவேண்டும் என்றால் சரியல்ல. அந்த வாய்க்காலை தான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாசன வாய்க்காலுக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.7 ஆவணம் வரைபடத்தில் புல எண்.327 மற்றும் 325/5 ஆகிய நிலங்களுக்கு பாசன கன்னி உள்ளதாகவோ, அந்த பாசன கன்னி வாய்க்கால் வழியதாக தண்ணீர் பாசனத்திற்கு செல்கிறது என்றோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என் நிலத்திற்கு வரும் பாசனத்தை தடை செய்ததாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் பிரதிவாதி என் வயலுக்கு வருகின்ற பாசனத்தை தடை செய்தார் என்றால் 07.03.2019-ல் தடை செய்தார். கடந்த 07.03.2019-ல் தடை செய்தார் என்பதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் கற்பனையானது என்று கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கை பொறுத்த வரையில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது நிலைநிற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு முந்தைய உரிமையாளர் இருந்த காலத்திலோ அல்லது தற்போது உள்ள பிரதிவாதியோ அவருக்கு சொந்தமான நிலத்திலிருந்து எந்த காலத்திலும் என் நிலத்திற்கு பாசன வசதி செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் சாகுபடி செய்யவில்லை என்றாலும், அதனால் தான் எனக்கோ, எனது மகனுக்கோ அதற்குண்டான பட்டா வழங்கப்படவில்லை என்றாலும், பாசன வசதியை பிரதிவாதி

தடை செய்ததாக கூறி தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்படகூடியது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

(S/d. A.Seethalakshmi),
District Munsif
Mannargudi.